# நற்கருணை வீரன்

இதழ் 53 ஆகஸ்ட் 2006 எண் 8



முழ்கிக்கொண்டிருக்கிறோம்! காப்பாற்றுங்கள்!

இந்து மகா சமுத்திரத்தில் பயங்கரப் புயலில் சிக்கிக்கொண்ட "கர்னா' என்னும் ஒரு சிறிய கப்பலில் பயணம் செய்தோர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தனர்.

அலைகள் மலைபோல் எழும்பி, கப்பலை மோதித் தாக்கின. கப்பலுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. எனவே கடலில் மூழ்கும் ஆபத்திலிருந்தது.

கப்பற் தலைவன் வானொலி அறைக்குச் சென்று, உதவி கேட்டு, அவசரச் செய்தி அனுப்பினான். ஒருவேளை அச்செய்தி எவரேனும் ஒருவருக்கு எட்டி, உதவி கிடைக்காதா என்ற ஏக்கத்தில் அவ்வாறு செய்தான். உதவி கிடைக்கும் என்று அவ்வளவாக நம்புவதற்கில்லை. ஏனெனில் நிலப்பகுதியிலிருந்து ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தது அக்கப்பல். அக்கப்பலின் அபயக்குரல் கேட்கும் அளவுக்கு வேறு எந்தக் கப்பலும் அவ்வளவு அருகில் இருப்பதாகக் கப்பற் தலைவன் நினைக்கவில்லை. புயலின் வேகம் மேலும் மேலும் அதிகரித்தது. மாலுமிகள் தைரியமுள்ளவர்கள்தான். எனினும் தங்கள் முடிவு நெருங்கிவிட்டதை உணர்ந்து, "உதவிக்கு விரைந்து வாருங்கள்" என்று மீண்டும் அபயக்குரல் எழுப்பி செய்தி அனுப்பினார்.

பல மைல்களுக்கு அப்பால் இருந்த ஆஸ்திரேலியா நாட்டுப் போர்க் கப்பல் ஒன்று தன் நாட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. திடீரென "கர்னா"வின் அபயக் குரலைக் கேட்ட அந்தப் போர்க் கப்பல், உடனடியாகத் தன் திசையைத் திருப்பி, மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை நோக்கி முழு வேகத்தில் விரைந்தது. "கர்னா"வின் தலைவன் மீண்டும் வானொலியில், "இன்னும் ஒரு மணி நேரம்கூட தாக்குப்பிடிக்க முடியாது. கப்பல் நிறையத் தண்ணீர். புயலின் வேகமும் தணிய வில்லை விரைவில் உதவி கிடைத்தால் நல்லது" என்று செய்தியனுப்பினான். போர்க் கப்பலின் பதில் செய்தி உடனே கிடைத்தது: "நிச்சயம் வந்துவிடுவோம். நம்பிக்கையோடு இருங்கள்." போர்க் கப்பல் "கர்னா' மூழ்குவதற்குள் வந்துவிட்டது. உடனே தீவிர முயற்சியுடன், கர்னாவிலிருந்த அனைவரையும் மீட்டு, போர்க் கப்பலுக்குள் பாதுகாப்புடன் சேர்த்தனர்.

சில சமயங்களில் சிறுவர் சிறுமியர் "கர்னா" கப்பலுக்கு ஒப்பாயிருக்கின்றனர். அவர்கள் நல்வர்களாயிருக்க விரும்பினாலும், சோதனைகள் புயல்போல் எழும்புவதால் அவற்றை எதிர்த்துப் போராட முடியாமல், சோதனைக்கு இடம் கொடுத்து, தீமை செய்யும் தருவாயில் இருக்கின்றனர். அந்த நேரத்தில் கடவுளை நோக்கிச் செபிக்க வேண்டும். நல்லவர்களாய் நிலைத்திருந்து நற்செயல்கள் புரிய கடவுள் அவர்களுக்கு வல்லமையளிப்பார்.

## பரிதாபத்துக்குரிய குடிசை




அன்று ஞாயிற்றுக்கிழமை. குருவானவர் மறையுரை நிகழ்த்தினார். பொதுவாக புனித புத்தகத்திலிருந்து வசனங்களை வாசித்துவிட்டு, அவற்றிற்கு விளக்கம் தருவார். ஆனால் அன்று அவ்வாறு செய்யாமல், முந்தின நாள் அவர் கண்கூடாகக் கண்ட ஒன்றைப்பற்றிக் கூறினார்; "நேற்று கிராமத்தின் இறுதி எல்லைக்குச் சென்றேன். அங்கு பரிதாபத்துக்குரிய குடிசை ஒன்றைக் கண்டேன். உள்ளே நுழைந்ததும் வயோதிகர் ஜானைப் பார்த்தேன். தன்னந் தனியே, அனைவராலும் கைவிடப்பட்டவராய், வாடிய முகத்தோடிருந்தார். தன் உணவைச் சமைப்பதற்குத் தேவையான விறகை வெட்டக்கூட வலிமை இழந்தவராய் இருந்தார். குடிசை முழுவதும் தூசி படிந்திருந்தது, அவரால் சுத்தம் செய்ய முடியவில்லை. அவரது உடைகள் அழுக்காயிருந்தன. அவற்றைச் சலவைக்குக் கொடுக்க முடியாத நிலை! அவரது உணவு சிறிது கஞ்சி மட்டுமே. கருணை உள்ளமுடைய ஒரு பெண் அதைக் கொடுத்து உதவினாள். இத்தகைய நிலையை நீடிக்கவிடலாமா? நீங்களே சிந்தித்துப் பதில் கூறுங்கள்."

திரு வழிபாடு முடிந்ததும் சிறுவர் சிறுமியர் அடங்கிய குழு ஒன்று குருவானவரிடம் சென்றது. "சுவாமி, வயோதிகர் ஜானைப்பற்றி நீங்கள் இனிமேல் கவலைப்பட வேண்டாம். தினமும், அவரது குடிசைக்குச் சென்று, சுத்தமாய்ப் பெருக்குவேன்." "நான் விறகு வெட்டி நெருப்பு மூட்டுவேன்." "நான் அவரது படுக்கையைச் சுத்தம் செய்து, துணிகளைச் சலைவைக்குப்போட்டு, திரும்ப வாங்கிக் கொடுப்பேன்." "எங்கள் தோட்டத்திலிருந்து தினசரி காய்கறிகள் கொண்டுவந்து கொடுப்பேன்." சிறுவர் சிறுமியரின் தாராள மனப்பான்மையைப் பார்த்தீர்களா? அன்று வரை வாடிய முகத்தோடு துக்கத்தில் மூழ்கியிருந்தவர் இப்பொழுது முக மலர்ச்சியோடு காணப்படுகிறார்.

## இயேசு பிடிபடுதல்

கொடும் துன்பத்தால் இரத்த வியர்வை வியர்த்து, விண்ணகத் தூதரால் வலுவடைந்த இயேசு தம் தொண்டர்களைத் தேடி வந்தார். அவர்களோடு பேசிக் கொண்டு இருக்கும் போது அவருடைய பன்னிரு தொண்டர்களில் ஒருவரான யூதாஸ் அங்கே வந்தார். அவரோடு பெருங் கூட்டம் வாள்களோடும் தடிகளோடும் தீப் பந்தங்களோடும் வந்தது.



அவர்களைக் கண்ட இயேசு, அவர்களிடம், "யாரைத் தேடி வந்தீர்கள்?" என்று கேட்டார். அவர்கள், "நாசரேத்தூர் இயேசுவை" என்றனர். இயேசு "நான்தான்" என்றார். அவர்கள் நடுங்கிக் கீழே விழுந்தனர். மீண்டும் இயேசு அவர்களிடம் "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்க, அவர்களும் மீண்டும் "நாசரேத்தூர் இயேசுவை" என்ற பதிலைச் சொன்னார்கள்.

அப்போது பேதுரு தமது வாளை உருவித் தலைமைக் குருவின் ஊழியனின் வலக் காதைத் துண்டித்தார். இயேசு பேதுருவிடம், "உனது வாளை உறையில் போடு. வாள் எடுப்போர் எல்லாரும் வாளால் மடிவர்" என்று கூறி வெட்டுண்ட காதைக் குணமாக்கினார். அப்போது தொண்டர்கள் அனைவரும் இயேசுவைத் தனியே விட்டுவிட்டு ஓடிச் சென்றனர். (தொடரும்)

# அடிமை பாஸ்கர்

## வீரப் பெண் (11)



பாஸ்கர் ரோடாவின் கதவைத் தட்டினதையும், அவனோடு பேசியதையும், இப்போது கத்தியும் கையுமாக நிற்பதையும் புஷ்பா கவனித்துக் கொண்டே இருந்தாள். அந்த நேரத்தில் ரோடா கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது. இனியும் புஷ்பா சும்மா பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அவள் சும்மா நின்றால், ரோடா நிச்சயம் செத்து மடிவான். ஆகையால் புஷ்பா மின்னல் வேகத்தில் ஓடி, பாஸ்கரின் மீது பாய்ந்து அவனைப் பிடித்துக்கொண்டு 'கொலைகாரன், கொலைகாரன்' என கத்தினாள். பாஸ்கருக்கு கோபம் பொங்கியது. தன் திட்டத்தைக் கெடுத்த தன் சகோதரியை தன் பெரிய எதிரியாகக் கருதினான். அளவு கடந்த ஆத்திரத்தினால், உடன் பிறந்த தங்கை என்றும் பாராமல் தன் கூரிய கத்தியால் புஷ்பாவின் மார்பில் குத்தினான். கத்திக் குத்து விழுந்த புஷ்பா கதறிக் கொண்டே கீழே விழுந்து மூர்ச்சையானாள்.

பாவம்! புஷ்பா அரை உயிராகக் கிடந்தாள். பாஸ்கர் பெஞ்சிலிருந்து கீழே குதித்துத் தன் தங்கையின் உடலைத் தாண்டி வெகு வேகமாக ஓடினான். இதற்குள், புஷ்பாவின் அழுகுரலைக் கேட்ட ரோடா அவசரமாக வெளியே வந்தான். ஆனால் அவளைக் குத்தியது யார் என்று ரோடாவுக்குத் தெரியவில்லை. ஓர் உருவம் இருளில் ஓடுவதுதான் அவன் கண்களில் பட்டது. உடனே தன் துப்பாக்கியை எடுத்து, அந்த உருவம் ஓடிய திசையில் சுட்டான். ஆனால் அதற்குள் அந்த உருவம் இருளில் மறைந்து விட்டது.



*(தொடரும்)*

## புனிதர் மரிய வியான்னி



69 சீமோன் டெஸ் காரெட்ஸ் தாம் பாரீசில் வாங்கிய பொருட்களைப் பெட்டிகளில் அடைத்து அனுப்பினார். அதைக் கண்டதும் தந்தை வியான்னி மகிழ்ச்சியால் சிரித்தார்; ஆனந்தக் கண்ணீர் வடித்தார். தம் பங்கு மக்களை அழைத்துப் பெட்டியைத் திறந்து காட்டி, "ஆ எவ்வளவு அழகு!" என்று குழந்தை போல மகிழ்ந்தார். "ஆ இனிமேல் எல்லாம் அருமையாக இருக்கும்" என்று பெருமைப்பட்டார்.

70 பங்கு மக்கள் கடவுளை அன்பு செய்ய வேண்டுமே! இதுதான் தந்தை வியான்னி ஆர்ஸூக்கு வந்தது முதல் அவரது சிந்தனை. கடவுளை அன்பு செய்ய, அவரை அறிந்திருக்க வேண்டுமே! பலருக்குக் கடவுளைத் தெரியாது. புரட்சி அதை அழித்து விட்டது. சிறுவர் சிறுமியர் மறைக்கல்வியே அறிந்தது இல்லை. அதனால் தந்தை வியான்னி சிறுவர் சிறுமிகளுக்கு மறைக்கல்வி கற்பிக்கத் தொடங்கினார். ஆனால் அவர்கள் காலையில் இருந்தே தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும். அல்லது ஆடு மாடு மேய்க்க வேண்டும். ஏன், இவரே இப்படித்தானே தன் இளமையைக் கழித்தார்?



**71** தந்தை வியான்னி காலை 6.00 மணிக்கு மறைக்கல்வி வகுப்பு நடத்தினார். பலருக்கு எழுத, வாசிக்கத் தெரியாது. அதனால் திரு நூல் கதை களைச் சொல்லியும் செபங் களை மீண்டும் மீண்டும் சொல்ல வைத்தும் மறைக் கல்வி வகுப்பை நடத்தினார். சிறுவர் சிறுமிகள் மனப் பாடமாக அவற்றைத் தெரிந்து கொண்டனர்.




கவனமில்லாதவர்களின் கன்னத்தில் செல்லமாகத் தட்டிக் கவனத்தைத் திருப்புவார். தந்தையிடம் மறைக் கல்வி கற்ற ஒருவர் "அவர் ஒருபோதும் கடுமையாக நடந்து கொண்டது இல்லை; எவ்வளவு இனிமையான நாட்கள் அவை" என்று நினைவு கூர்ந்தார்.

**72** ஒவ்வொரு நாளும் சிறுவர், சிறுமியர் வந்து மறைக்கல்வி கற்றனர். அந்தப் பகுதியிலேயே ஆர்ஸில்தான் குழந்தைகள் மறைக்கல்வி அதிகம் அறிந்திருந்தனர். ஞாயிறு மாலைச் செபத்திற்கு முன் மற்றவர்களுக்கு மறைப் போதகம் நடந்தது. ஆண்டுக்கு ஆண்டு மறைக் கல்வி கற்க வருபவர்களின் தொகை மிகுந்தது. தந்தை வியான்னி போதகப் பீடத்தில் நின்றபடி போதித் தார். "உயிருள்ளவராகக் கடவுளை அவர் காட்டு கிறார்" என்று வியந்தனர் அவரது போதனையைக் கேட்டவர்கள்.



(தொடரும்)

Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at
St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, Tamil Nadu
Price: 50 p only. 26th of every month ✆ (0451) 2432188
*Regd. with RNI No.1316 / 57*
**REGISTERED TN / SR / DDL - 225 / 2006 - 2008**
Licensed to Post without Prepayment - TN/WPP - 62/SR/2006 - 2008



## அவனது இரத்தத்தை நாய்கள் நக்கின

'ஆகாப்' என்ற கொடூர மனமுள்ள அரசன் ஒருவன் இருந்தான். அவன் 'நாபோத்' என்ற நல்ல மனிதரின் திராட்சைத் தோட்டத்தைக் கவர்ந்துகொள்ள விரும்பினான். ஆனால் தன் மூதாதையரின் அத்தோட்டத்தை நாபோத் கொடுக்க விரும்பவில்லை. எனவே, ஆகாப் அரசன் நாபோத்தைக் கொன்று அவனது திராட்சைத் தோட்டத்தைத் தனதாக்கிக் கொண்டான்.

'எலியாஸ்' என்ற இறைவாக்கினர் அரசனிடம்சென்று, 'நீ நாபோத்தைக் கொன்ற இடத்திலேயே உனது இரத்தத்தை நாய்கள் நக்கும்', என்று கடவுளின் பெயரால் கூறினார். உண்மையில் அது நிறைவேறியது. சில ஆண்டுகளுக்குப் பின் ஆகாப் கொல்லப்பட, அவனது இரத்தத்தை நாய்கள் நக்கின.

கடவுள் நாம் திருடுவதையும், திருடுவதைப் போன்ற பிற செயல்களையும் வெறுக்கிறார். எடுத்துக்காட்டாக, பிறர் பொருளைப் பழுதடையச் செய்தல், பிறரை ஏமாற்றுதல் போன்றவை. உன் பொருளை பிறர் எடுக்கும்போது அவர் உனக்குத் தீங்கிழைப்பதாக நீ கருதுகிறாய். எனவே நீயும் ஒருபோதும் பிறர் பொருளைக் கவர நினைக்காதே. இந்த நேரத்தில் நீங்களனைவரும் ஒரு தீர்மானம் எடுங்கள்: இன்று முதல் நான் பிறருக்கு உரியதை ஒருபோதும் எடுக்க மாட்டேன்.

*கடவுளின் பிள்ளைகள் ஒருபோதும் திருடமாட்டார்கள், எப்போதும் நேர்மையோடிருப்பர்.*